## *21*

# கடந்த, நிகழ், மற்றும் எதிர் காலத்தில் இரட்சிப்பு

## (5:6–11)

*ஆப்பிரிக்க நாட்டில் மனமாறிய ஒருவர் ஊழியக்காரரிடத்தில், "கிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிய வரலாறு முதன்முதலாக எனக்கு வாசிக்கப்பட்டபோது, நான் யூதாஸையும் பிலாத்துவையும், யூதர்களையும் போர்ச்சேவகர்களையும் சபித்தேன். ஆனால் கிறிஸ்து ஏன் மரித்தார் என்பதை நான் புரிந்துகொண்டபோது, நான் என்னையே சபித்துக்கொண்டேன் - ஏனென்றால் எனது பாவங்களே அவரைச் சிலுவையில் அறைந்தன" என்று கூறினார்.[1] நமது வேதபாடப்பகுதியில் ரோமர் 5:8 ஒரு திறவுகோல் வசனப்பகுதி யாக உள்ளது: "கிறிஸ்து நமக்காக மரித்தார்." "காக" என்பது, "நமது சார்பாக" அல்லது "நமது இடத்தில்" என்று அர்த்தப்படக்கூடிய huper என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[2] இவ்விரு அர்த்தங்களுமே சிலுவையைப் பற்றிய வேதாகம போதனைக்குப் பொருந்துகின்றன. இந்தப்பாடத்தை நாம் முடிப்பதற்கு முன்னர், நீங்கள் "கிறிஸ்து எனக்காக மரித்தார்" என்பதைப் புரிந்துகொண்டு உறுதிப்பாட்டுடன் கூறமுடியும் என்று நான் நம்புகிறேன்.*

*இது ரோமர் 5:1-11ன் அடிப்படையில் அமைந்த இரண்டாவது எடுத்துரைப்பாகும், இதில் பவுல் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலில் இருந்து விளையும் ஆசீர்வாதங்களைக் குறிப்பிட்டார். முந்திய பாடம் இவ்வேதவசனப்பகுதியின் முதல் பாகத்தின்மீதானதாக இருந்தது. இந்தப்பாடம் 6ம் வசனத்தில் இருந்து தொடங்கி இவ்வசனப்பகுதியின் முடிவுவரை செல்லும்.*

*நான், இந்தப்பாடத்தை "கடந்த, நிகழ், மற்றும் எதிர்காலத்தில் இரட்சிப்பு" என்று அழைக்கிறேன். நாம் கிறிஸ்தவராகிறபோது கடந்தகாலப் பாவங்களில் இருந்து கிடைக்கும் இரட்சிப்பைக் குறிப்பிட, "இரட்சிக்கப்பட்டோம்" என்ற வார்த்தையை நாம் அடிக்கடி பயன்படுத்துகிறோம் (மாற்கு 16:16; ரோமர் 10:9ஐக் காணவும்). சிலவேளைகளில் நாம் இவ்வார்த்தையை நித்தியத்திற்கும் இரட்சிக்கப் பட்டிருத்தலை முன்னெதிர்நோக்குவதில் பயன்படுத்துகிறோம் (1 கொரிந்தியர் 5:5; ரோமர் 13:11ஐக் காணவும்). நாம் அன்றாடம் இரட்சிக்கப்படுகிறோம் என்ற கருத்து ஒன்றும் உள்ளது (1 கொரிந்தியர் 1:18; 2 கொரிந்தியர் 2:15). "இரட்சிப்பு" என்ற வார்த்தையின் இந்த மூன்று பயன்பாடுகள் பின்வருவது போன்று சுருக்கி உரைக்கப்படலாம்:*

- *கடந்தகாலத்தில் இரட்சிப்பு: பாவத்தின் தண்டனையில் இருந்து இரட்சிப்பு.*

- *நிகழ்காலத்தில் இரட்சிப்பு: பாவத்தைச் செயல்படுத்துவதிலிருந்து இரட்சிப்பு.*
- *எதிர்காலத்தில் இரட்சிப்பு: பாவத்தின் பிரசன்னத்திலிருந்து (பரலோகத்தில்) இரட்சிப்பு.*

*முந்திய பாடத்தில், நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலில் இருந்து கிடைக்கும் கடந்தகால, நிகழ்கால, மற்றும் எதிர்கால ஆசீர்வாதங்களைப் பற்றிப் பவுல் பேசினார் என்று குறிப்பிட்டோம். கடந்தகாலத்தைப் பொறுத்தமட்டில், நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம் (5:1). நிகழ்காலத்தைப் பொறுத்தமட்டில், நாம் அவரது கிருபையில் நிலைநிற்கிறோம் (வசனம் 2). எதிர் காலத்தைப் பொறுத்தமட்டில், நாம் அவரது மகிமையின் நம்பிக்கையைக் கொண்டிருக்கிறோம் (வசனம் 2). இந்தப்பாடத்தில், நாம் பவுல் திரும்பவும் கடந்த, நிகழ், மற்றும் எதிர்காலங்களைக் குறிப்பிடுவதைக் காண்போம்.*

## *கடந்தகாலத்தில் இரட்சிப்பு (5:6-11)*

*கடந்தகாலத்தில் இரட்சிப்பு என்பது நமது வேதவசனப்பகுதியில் ஒரு பிரதான வலியுறுத்தமாக உள்ளது: "… நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, … நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமா னால், … இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து …" (வசனங்கள் 9-11). நாம் பாவத்தின் சுமை யினால் எடைகீழாக்கப்பட்டிருந்தோம் (ரோமர் 3:23; 6:23அ), ஆனால் நாம் நீதிமான்களாக்கப்பட்டு (5:9) தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டோம் (வசனங்கள் 10, 11). இந்த இரட்சிப்பு இயேசுவின் மூலமாக வருகிறது (வசனம் 11). குறிப்பாக, இது அவரது இரத்தத்தின் மூலமாக (வசனம் 9), அவரது மரணத்தில் சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலமாக உள்ளது (வசனம் 10).*

*அது நம்மை 6 முதல் 8 வரையுள்ள வசனங்களுக்குக் கொண்டுவரு கிறது. இவ்வசனங்கள் "வேதவசனத்தில் தெய்வீக அன்பின் மிக ஆழமான விவரிப்புகளில் ஒன்றை" முன்னிறுத்துகின்றன.*[3]

> *அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக் கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.*

*இவ்வசனப்பகுதி கிறிஸ்து இல்லாத நிலையில் மனிதகுலத்தின் ஆவிக் குரிய சூழ்நிலையை விவரித்தலைக் கொண்டு தொடங்குகிறது: "நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே" (வசனம் 6அ). "பெலனற்றவர்களாய்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள* asthenes *என்ற வார்த்தை, "பெலன்" (*sthenos*) என்பதற்குரிய வார்த்தைக்கு முன்னாக (*a *என்ற) ஒரு எதிர்மறையைச் சேர்த்துப் பெற்றதாக உள்ளது. இவ்வார்த்தை, "பலவீனமான … , நோய்ப்பட்ட, நோயுள்ள" என்பதைக் குறிக்கிறது.*[4] *இது "மனிதன் நோய்வாய்ப்பட்டவனாக*

- தனது வாழ்வை வீணடிக்கும் பாவத்தின் வியாதியால் வடிவிழந்து பலமிழந்து போனவனாக இருக்கிறான் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது ... தேவனுடைய குணமாக்கும் வல்லமையின்றி அவனது பெருந்துன்பம் முடிவை நெருங்கியுள்ளதாக உள்ளது."[5] ஒரு பழைய மூதுரை, "தங்களுக்குத்தாங்களே உதவி செய்துகொள்பவர்களுக்கே தேவன் உதவி செய்கிறார்" என்று கூறுகிறது, ஆனால் ரோமர் 5:6, தங்களுக்குத்தாங்களே உதவிசெய்துகொள்ள *இயலாதவர்களுக்குத்* தேவன் உதவுகிறார் என்று கூறுகிறது. கிறிஸ்து இல்லாத நிலையில், மக்கள் "பெலனற்றவர்களாக," நம்பிக்கையற்றவர்களாக, இழந்துபோகப்பட்டவர்களாக இருக்கின்றனர்.

உலகமானது அந்த பெலனற்ற நிலையில் இருந்தபோது, "குறித்த காலத்தில் கிறிஸ்து ... மரித்தார்" (வசனம் 6ஆ). "குறித்தகாலத்தில்" என்பது கிரேக்க மொழியில், "காலத்தில் தீர்மானமான ஒரு குறிப்பை" சுட்டிக் காண்பிக்கும் *kairos* என்ற வார்த்தையிலிருந்து வருகிறது.[6] "குறித்தகாலம்" என்பது "தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றில் சரியான காலம்" என்பதைக் குறிக்கக்கூடும் (கலாத்தியர் 4:4ஐக் காணவும்),[7] அல்லது இது "நாம் மிகவும் பெலனற்றவர்களாகவும் நமக்கு அவர் மிகவும் தேவைப்பட்டவர்களாகவும் இருந்த காலத்தை" அர்த்தப்படுத்தக்கூடும். லியோன் மோரிஸ் என்பவர், "குறித்தகாலம்" என்பது பின்வரும் இரு சிந்தனைகளையும் சூழ்ந்திருக்கலாம் என்று கருத்துத் தெரிவித்தார்: "நாம் பாவிகளாயிருக்கும்போதே அவர் மரித்தார், மற்றும் தேவனுடைய நோக்கத்தில் பொருத்தமான ஒரு காலத்தில் மரித்தார்."[8]

இயேசு யாருக்காக மரித்தார்? கிறிஸ்து "அக்கிரமக்காருக்காக" மரித்தார் (ரோமர் 5:6இ). "அக்கிரமக்காரருக்காக" என்பது கிறிஸ்து இல்லாத நிலையில் நமது ஆவிக்குரிய சூழ்நிலையை விவரிக்கும் இரண்டாவது சொற்றொடராக உள்ளது. "அக்கிரமக்காரர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *asebeia* என்ற கிரேக்க வார்த்தையானது, *sebomai* என்ற வார்த்தையை *a* என்ற முன்குறிப்புச் சொல்லைக் கொண்டு மாற்றிப் பெறப்பட்டதாகும். *Sebomai* என்பது "பயபக்தியுடன் நிற்குதல், ... பயபக்தி, ஆராதனை" என்று அர்த்தமாகிறது.[9] இவ்வாறு, *asebeia* என்பது தேவனிடத்தில் பயபக்தியுடன் நில்லாத, அவருக்குப் பயபக்தி செலுத்தாத, அவரை ஆராதிக்க மறுக்கிற மக்களைக் குறிக்கிறது. இது தேவனுடைய நபர்த்துவத்தை மதிக்காத, எதிர்க்கிற குணத்தைக் குறிக்கிறது.[10] நம்மில் சிலர், "அது நிச்சயமாக *என்னைப்* பற்றிய பேச்சாக இருக்க முடியாது!" என்று நினைக்கலாம். இருப்பினும், 6ம் மற்றும் 8ம் வசனங்களின் முடிவுகளுக்கு இடையில் உள்ள இணைகருத்தைக் கவனியுங்கள்: 6ம் வசனம், "கிறிஸ்து *அக்கிரமக்காரருக்காக* மரித்தார்" என்று கூறுகிறது; 8ம் வசனம், "கிறிஸ்து *நமக்காக* மரித்[தார்]" என்று கூறுகிறது! "அக்கிரமக்காரர்" என்பது "நமக்காக" என்பதை சமானமாக்குகிறது!

இயேசு வருவதற்குமுன் மனிதகுலத்தின் ஆவிக்குரிய நிலையை விவரிக்க இன்னும் இரண்டு சொற்றொடர்கள் நமது வேதவசனப் பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ளன. 8ம் வசனம், "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்[தார்]" என்று கூறுகிறது (வசனம் 8அ). "பாவிகள்" என்பது "இலக்கைத் தவறவிடுதல்" என்று அர்த்தப்படுகிற *hamartia* என்ற வார்த்தையிலிருந்து வருகிறது.[11] அந்த வார்த்தை, நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தேவன் நோக்கங் கொண்டிருந்தாரோ, அவ்வாறு இருக்க நாம்

தவறிவிட்டோம் என்பதை அறிவிக்கிறது.

10ம் வசனத்தில் நான்காவது சொற்றொடர் காணப்படுகிறது: "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், ... அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால்'' (வசனம் 10அ). ''சத்துருக்கள்'' என்ற வார்த்தை, ''வெறுப்பு'' என்பதற்கான echthos என்ற வார்த்தைக்கு உறவுவார்த்தையான echthros என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. *"சத்துருக்கள்* என்பது ஒரு பலத்த வார்த்தையாகும். ... சத்துரு என்பவர் நண்பராயிருக்கக் கொஞ்சங்கூட ஒத்துவராத நபராக இருக்கிறார்; இது எதிர்முகாமில் உள்ள எவரையேனும் அர்த்தப்படுத்துகிறது.''[12] C. S. லூயிஸ் என்பவர், "நாம் முன்னேற்றப்பட வேண்டிய நிலையில் உள்ள பூரணமற்ற ஜீவிகளாக மாத்திரமல்ல; ஆனால் நமது ஆயுதங்களைக் கீழே போட வேண்டியுள்ள கலகக்காரர்களாகவும் இருக்கிறோம்" என்று கூறினார்.[13] நாம் *பெலனற்றவர்களாக* இருந்தோம் (வசனம் 6), ஆனால் *பகைமையானவர்களாக* இருந்தோம் (8:7ஐக் காணவும்; கொலோசெயர் 1:21). காயப்பட்ட மிருகம் ஒன்று, தனக்கு உதவி செய்ய வருபவரைக் கடித்துக் கவ்வ முயற்சி செய்வது எனக்கு நினைவுக்கு வருகிறது.

''பெலனற்றவர்கள்,'' ''அக்கிரமக்காரர்,'' ''பாவிகள்,'' ''சத்துருக்கள்'': இவைகள் புகழக்கூடிய சொற்றொடர்களாக இருப்பது மிகவும் கடினமாகும்! இருந்தபோதிலும், தேவன் இன்னமும் நம்மீது அன்புகூர்ந்து நமக்காக மரிக்கும்படி தமது சொந்த குமாரனை அனுப்பினார். மோரிஸ் என்பவர், "தேவன் நமது பண்பினிமித்தமல்ல, ஆனால் தமது பண்பினிமித்தமாகவே நம்மீது அன்புகூருகிறார்" என்று கூறினார்.[14] ஜான் R. W. ஸ்டாட் என்பவர், "கொடையைக் கொடுக்கிறவருக்கு எவ்வளவு செலவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கு அதைப் பெறுபவர் தகுதியற்றவராக இருக்கிறார், இதில்தான் மாபெரும் அன்பு காணப்பட முடியும். இந்தத் தர அளவைகளினால் அளக்கப்பட்ட வகையில் கிறிஸ்துவுக்குள் தேவ அன்பு முற்றிலும் தனித்துவமானதாக உள்ளது" என்று எழுதினார்.[15]

தேவ அன்பின் திகைக்கச் செய்யும் இயல்பு 7 மற்றும் 8ம் வசனங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்வசனப்பகுதி, ''நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக[16] ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான்'' என்று தொடங்குகிறது (வசனம் 7). "நீதிமான் [dikaios]" மற்றும் "நல்லவன் [agathos]'' ஆகியவற்றுக்கு இடையில் வேறுபாடு உள்ளதா இல்லையா என்பது பற்றி - அப்படியே வேறுபாடு இருந்தாலும் அந்த வேறுபாடு என்ன என்பது பற்றி மக்கள் வியப்படைகின்றனர். சிலர் வேறுபாடு இல்லை என்று நினைக்கின்றனர். அவர்கள் தெர்தியு இந்த நிருபத்தை எழுதும்படி அவருக்குக் கூறிக்கொண்டிருந்த பவுல் (16:22ஐக் காணவும்); ஒரு கூற்றை ஏற்படுத்திப் பின்பு அதைத் தகுதிப்படுத்த முயற்சி செய்தார் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்: "நீதிமானுக்காக (நல்லவனுக்காக) ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக *ஒருவேளை* ஒருவன் மரிக்கத்துணிவான். ... ஆனால். ..."

இருப்பினும், இவ்விரு சொற்றொடர்களுக்கும் இடையில் *சில* வித்தியாசங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பெரும்பான்மையான எழுத்தாளர்கள் நம்புகின்றனர். "நீதிமான்'' என்பவர் நீதியுள்ள வாழ்வை வாழ முயற்சிசெய்கிறவராக, ஆனால் குறிப்பாக விரும்பப்படாதவராக இருக்கிறார். சிறுமி ஒருத்தி, "மோசமான எல்லா மனிதர்களையும் நல்லவர்களாக்கும் -

நல்லவர்களாயிருக்கிற எல்லா மனிதர்களையும் மேன்மையானவர்களாக்கும்" என்று ஜெபித்தாள். எல்லா நல்ல மனிதர்களும் (பவுலின் சொற்றொடரைப் பயன்படுத்துவதென்றால், "நீதிமான்களும்") மேன்மையானவர்களாக இருப்பதில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. இவ்வகையான நேர்மாறைப் பவுல் நோக்கங்கொண்டு இருந்திருப்பார் என்றால், "நல்லவன்" என்பது "நல்ல மனிதர்" என்பதை மாத்திரமல்ல, ஆனால் "மேன்மையானவர்" என்பதையும் குறிக்கிறது - அதாவது, விரும்பப்படத்தக்கவர் மற்றும் அன்புகூரப்படத்தக்கவர். அவ்வாறு செய்யும்படி அழைக்கப்பட்டால் நம்மில் பெரும்பான்மையானவர்கள், முதலாவது குணமுடைய ("விரும்பப்படத்தக்கவர்" என்ற) தனிநபராயிருப்பதைக் காட்டிலும் இரண்டாவது குணமுடைய ("அன்புகூரப்படத்தக்கவர்" என்ற) தனி நபராக இருக்க நம்மையே தியாகம் செய்ய மிகவும் மனவிருப்பம் உள்ளவர்களாயிருப்போம்.

இவ்விரு சொற்றொடர்களுக்கும் இடையில் வித்தியாசம் ஏற்படுத்தப்பட வேண்டுமா இல்லையா என்பது முக்கியத்துவமற்றதாக உள்ளது. எவ்வகையிலும் பவுலின் கருத்து ஒன்றாகவே உள்ளது: மக்கள் சிலர் மற்றவர்களுக்காகத் தங்கள் உயிரைக் கொடுக்கின்றனர். இராணுவ சேவையில் உள்ள ஆண்களும் பெண்களும், தங்கள் உயிரைத் தங்கள் குடும்பம், நண்பர்கள், மற்றும் நாட்டிற்காகக் கொடுக்கின்றனர். ஒரு வேளை மற்ற விவரிப்புகள் மனதிற்கு வரலாம்.[17] இருப்பினும், சட்டப்படி மக்கள் தங்கள் இருதயங்களுக்கு "மிகவும் நெருக்கமாக அன்பாக" இருக்கிறவர்களுக்காக மாத்திரமே இறக்க விருப்பமாக உள்ளனர்.

அது நம்மை 8ம் வசனத்திற்குக் கொண்டு வருகிறது: "தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (வசனம் 8ஆ). "தமது அன்பு" என்பது தேவனுக்கே தனித்துவமான அன்பாக உள்ளது - இது மனித அன்புக்கு நேர்மாறானதாக உள்ளது, இது நம்மீது அன்புகூருபவர்களுக்கென்று நாம் ஒதுக்கி வைத்துள்ள அன்பு போன்றதாக உள்ளது. இயேசுவின் மரணத்தில் தேவன் ஒரு விசேஷித்த அன்பைச் செயல்விளக்கப்படுத்தினார். அவர் தமது *சொந்த* குமாரனைக் கையளித்தார் என்பது "அவரது *சொந்த* அன்பாக" இருக்கிறது, ஆனால் அது அதைவிட மேலானதாக உள்ளது. பிதாவும் குமாரனும் ஒன்றாக இருக்கிறார்கள் என்பதால் (யோவான் 10:30ஐக் காணவும்), அவர்களில் ஒருவர் ஒரு செயலைச் செய்கிறபோது, செயல்விளைவில், இன்னொருவரும் அதைச் செய்கிறார். இவ்வாறு, தேவன் தமது குமாரனைக் கையளித்ததில், அவர் தம்மைத்தாமே கையளித்தார்.[18] 8ம் வசனத்தில், "விளங்கப்பண்ணுகிறார்" என்ற வார்த்தையைக் கவனிக்கவும்; இவ்விடத்தில் நிகழ்கால வினைச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளது, தேவன் அன்றாடம் தமது அன்பைத் *தொடர்ந்து* காண்பிக்கிறார் என்பதை வலியுறுத்துகிறது.

நமது அன்பிற்கும் தேவனுடைய அன்பிற்கும் இடையில் உள்ள வலிவான நேர்மாறு, இந்த வசனத்தின் முதற்பகுதியில் காணப்படுகிறது: "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (வசனம் 8). நாம் தேவபக்தியுள்ளவர்களாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரிக்க வில்லை; இல்லை, நாம் "அக்கிரமக்காரராக" இருந்தோம் (வசனம் 6). நாம் இருக்க வேண்டியபிரகாரம் இருந்தபோது அவர் நமக்காக மரிக்க

*வில்லை; இல்லை, நாம் "பாவிகளாயிருந்தோம்" (வசனம் 8). நாம் அவருக்குச் சிநேகிதர்களாயிருக்கையில் அவர் நமக்காக மரிக்கவில்லை; இல்லை, நாம் அவருக்குச் "சத்துருக்களாயிருந்தோம்" (வசனம் 10). இது திகைப்புக்குரியது! சார்லஸ் ஸ்பர்ஜன் என்பவர் பின்வருமாறு கூறினார்,*

> *அதை உரத்துக் கூவுங்கள், அல்லது ஓசையின்றிக் கூறுங்கள்; அதைப் பெரிய எழுத்துக்களில் அச்சிடுங்கள், அல்லது பெரிய கையெழுத்தாக எழுதுங்கள். அதைப் பெருமிதமாய்ப் பேசுங்கள்; அது வேடிக்கையாகப் பேசுவதற்கான விஷயமல்ல. அதைப்பற்றிச் சந்தோஷமாய்ப் பேசுங்கள்; அது வருத்தம் பற்றிய ஆய்வுக்கருத்தல்ல. அதைப்பற்றி உறுதியாகப் பேசுங்கள்; அது வழக்கிட இயலாத உண்மையாக உள்ளது. அதைப்பற்றி மெய்யுறுதிப்பாட்டுடன் பேசுங்கள்; ஏனெனில் மனிதனின் ஆத்துமாவில் இருந்து ஏதேனும் சத்தியம் எழுவதாக இருக்க வேண்டுமென்றால், அது இதுதான். அதை அக்கிரமக்காரர் வாழுமிடங்களில் பேசுங்கள்; அது உங்கள் சொந்த வீடாகவும் உள்ளதே. அதைத் தீய ஒழுக்கம் உள்ளவர்கள் இருக்கும் இடங்களிலும் பேசுங்கள். அதை [சிறைச்சாலையில்] கூறுங்கள்; மரணப்படுக்கையினருகில் அமர்ந்து மென்மையான சிற்றொலியில் அதை வாசியுங்கள் - "அக்கிரமக்காரருக்காகக் கிறிஸ்து மரித்தார்."[19]*

*இதுபோன்ற அன்பைப் புரிந்துகொள்ளுதல் என்பது நமக்குக் கடினமாக உள்ளது. நீங்கள் என்னிடத்தில், "உங்கள் மனைவிமீது நீங்கள் அன்புகூருகிறீர்களா?" என்று கேட்டால், நான், "நிச்சயமாகவே, நான் அவள்மீது அன்புகூருகிறேன். அவள் இரக்கமும் அன்பும் கொண்டிருக்கிறாள். அவள் ஒரு அழகிய புன்னகைக்குச் சொந்தக்காரியாக இருக்கிறாள். அவள் என்மீது அன்புகூர்ந்து எனக்காகத் தினமும் தியாகங்கள் செய்கிறாள்" என்று பதில் அளிப்பேன். நான் அதுபோன்று பதில் அளித்தால், எனது மனைவியின் மீது நான் அன்புகூருவது ஏன் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். இருப்பினும் நான், "நிச்சயமாகவே, நான் அவள்மீது அன்புகூருகிறேன். அவள் அற்பமானவளாகவும் அழகற்றவளாகவும் இருக்கிறாள், என்னைப் புண்படுத்தக்கூடிய எல்லாவற்றையும் அவள் செய்கிறாள். அவள் என்னை* வெறுக்கிறாள்*" என்று பதில் அளித்தால் எப்படியிருக்கும்? நான் ஏன் அவள்மீது அன்புகூருகிறேன் என்று புரிந்துகொள்வது உங்களுக்குக் கடினமாக இருக்கும், அல்லவா? அப்படியென்றால், நாம் அக்கிரமக்காரரான பாவிகளாக, அவருக்குச் சத்துருக்களாக இருக்கும்போது தேவன் நம்மீது அன்புகூர்ந்தார் என்பது எவ்வளவு திகைப்புக்குரியதாக உள்ளது!*

*இயேசுவின் இடத்தில் என்னை வைத்தால், நான் எவ்வாறு செயல்படுவேன் என்று என்னை நானே கேட்டுக்கொள்கிறேன். ஆறு லட்சம் யூதர்கள் மற்றும் பிற மக்களினக் குழுக்களை ஒட்டுமொத்தமாகக் கொலைசெய்தல் என்ற படுகொலைக்குப் பொறுப்பாளியான, நாஜிகளின் தலைவன் அடால்ஃப் ஹிட்லர்[20] எனக்கு முன்பாக நிற்பதாகக் கற்பனை செய்துகொள்கிறேன். நானே மரித்தல் அல்லது ஹிட்லரை மரிக்க அனுமதித்தல் என்ற இருதெரிவுகளில் ஒன்றைத் தேர்ந்துகொள்ள வேண்டும் என்று எனக்கு விதிக்கப்பட்டால் எப்படி இருக்கும்? தெரிந்துகொள்ளுதல் என்பது எனக்கு சுலபமாக இருக்கும்; நான் உயிர்வாழ்வைத் தேர்ந்துகொள்வேன்; இருப்பினும், இயேசுவுக்கு இதுபோன்றதொரு*

தேர்ந்துகொள்ளுதல் தரப்பட்டபோது, அவர் மரிப்பதைத் தேர்ந்துகொண்டார் (யோவான் 10:18; பிலிப்பியர் 2:5-8ஐக் காணவும்)!

அவர் "நமக்காக மரித்தார்" என்பதால், நாம் இரட்சிக்கப்பட முடியும். இந்தப் பாடத்திற்கான முன்னுரையில் குறிப்பிடப்பட்டதுபோன்று, "நமக்காக" என்பது "நமது சார்பாக" அல்லது "நமது இடத்தில்" என்று அர்த்தப்பட முடியும் (1 கொரிந்தியர் 15:3ஐக் காணவும்). நமது பாவங்களின் குற்றத்தை - மற்றும் அதினால் வரும் தண்டனையை - கிறிஸ்து தம்மீது சுமந்துகொண்டார்; அவர் நமது கிருபாதார பலியானார் (ரோமர் 3:26). இதன் விளைவாக, நாம் இயேசுவில் விசுவாசம் கொண்டு கீழ்ப்படிதலில் நமது விசுவாசத்தை வெளிப்படுத்தும்போது (1:5; 16:26ஐக் காணவும்), தேவன் நமது பாவங்களை மன்னிக்கிறார் மற்றும் நம்மை நீதிமான்களாக எண்ணுகிறார் (4:22-24ஐக் காணவும்). அது "கடந்தகாலத்தில் இரட்சிப்பாக" உள்ளது!

ஆச்சரியமான இந்த ஆவிக்குரிய மாற்றத்தைப் பற்றிப் பவுல் கலந்துரையாடுகையில், அவர் இதற்கு முன் நாம் சந்தித்திராத ஒரு சொற்றொடரை அறிமுகப்படுத்தினார்: "ஒப்புரவாக்கப்படுதல்." நாம் "தேவனுடனே ஒப்புரவாக்கப்பட்டோம்"; "ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின ..." (5:10, 11). நாம் கிறிஸ்தவர்களானபோது, நாம் "நீதிமான்களாக்கப்பட்டோம்" என்று இதற்குமுன்பு பவுல் கூறினார் (வசனம் 1); இப்போது அவர் நாம் ஒப்புரவாக்கப்பட்டோம் என்று கூறினார். "நீதிமான்களாக்கப்படுதல்" மற்றும் "ஒப்புரவாக்கப்படுதல்" என்ற சொற்றொடர்கள் பிரிக்கப்பட இயலாதவைகளாகும். இவ்விரண்டுமே தேவனுடைய பிள்ளைகள் ஆவதைக் குறிக்கின்றன, இருப்பினும் இவை ஒவ்வொன்றும் கர்த்தர் நமக்குச் செய்துள்ளவற்றிற்குக் கூடுதல் உட்கருத்தைத் தருகின்றன.

"ஒப்புரவாக்கப்படுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட *katallasso* என்ற வார்த்தை அடிப்படையில் "மாற்றுதல்" (*allasso* ["மாற்றுதல்"] என்பது *kata* என்பதைக் கொண்டு பெலப்படுத்தப்படுகிறது) என்ற அர்த்தம் கொண்டுள்ளது.[21] இவ்வார்த்தை மக்களுக்குப் பயன்படுத்தப்படும்போது, இது "பகைமையிலிருந்து நட்புறவுக்கு மாற்றுதல்" என்று அர்த்தப்படுகிறது.[22] "Reconcile" என்ற ஆங்கில வார்த்தை, "conciliate" ("யாரேனும் ஒருவரை நண்பராக்கிக்கொள்ள முயற்சிசெய்தல்") என்ற வார்த்தையுடன் "re" ("மீண்டும்") என்ற முன்னிடைச் சொல்லைச் சேர்த்துக்கொள்கிறது. "ஒப்புரவாக்கப்படுதல்" என்பதற்கு, "திரும்பவும் நண்பர்களாக்கிக்கொள்ளுதல்" என்பது ஒரு நல்ல விளக்கமாக உள்ளது. சண்டையிட்டுக் கொண்டுள்ள இரண்டு நண்பர்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவர்கள் ஒருவர் மற்றவருடன் பல நாட்களாகப் பேசிக்கொள்ளாதிருக்கின்றனர்; அவர்கள் விலகியிருக்கின்றனர். பின்பு, ஒருநாள், அவர்கள் அமர்ந்து தங்களின் மாறுபாட்டை மாற்றத் தீர்மானிக்கின்றனர். இப்போது அவர்கள் *ஒப்புரவாக்கப்பட்டுள்ளனர்;* அவர்கள் திரும்பவும் நண்பர்களாக உள்ளனர்.

"ஒப்புரவாக்கப்படுதல்" என்ற வார்த்தை, ஒருகாலத்தில் நாம் தேவனுக்குச் சிநேகிதர்களாக இருந்து, ஆனால் பின்பு பாவம் செய்து கர்த்தரைவிட்டுப் புறம்பே சென்ற உண்மையைச் சிந்தைக்குக் கொண்டு வருகிறது. நாம் தேவனைவிட்டு விலகியிருந்தோம். ஏசாயா பின்வருமாறு எழுதினார்,

இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை;
கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை.
உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும்
உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது;
உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு
அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது (ஏசாயா 59:1, 2).

தேவன் தம்மைத் தமது மக்களிடத்தில் இருந்து பிரித்துக்கொள்ளவில்லை, ஆனால் மக்களே பாவத்தின்மூலமாகத் தங்களைத் தேவனிடத்திலிருந்து பிரித்துக்கொண்டனர். பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு தம்பதியர் ஒரு காரில் சாலையில் சென்று கொண்டிருந்தனர். பயணிப்பக்க ஜன்னல் ஓரமாக அமர்ந் திருந்த பெண் ஓட்டும் இருக்கையில் அமர்ந்திருந்த தனது கணவனைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டாள். அவள், "நாம் திருமணமான புதிதில் இந்தக் காரில் பயணம் செய்தபோது ஒருவருக்கொருவர் *மிகவும்* நெருங்கி அமர்ந்திருந்தோம்" என்று கூறினாள். அதற்கு அந்த ஆண், "நான் நகரவில்லையே" என்று கூறினார். நீங்கள் ஒருகாலத்தில் இருந்ததுபோன்று இப்போது தேவனுடன் நெருக்கமாக இல்லை யென்றால், தேவனல்ல, ஆனால் நீங்கள் புறம்பே நகர்ந்தீர்கள் என்றாகிறது.

இது உண்மையாக இருப்பதால், தேவன் மக்களிடத்தில் ஒப்புரவாகுதல் அவசியமல்ல, ஆனால் மக்கள் தேவனிடத்தில் ஒப்புரவாகுதலே அவசியமாக உள்ளது. பவுல், "தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்கிறோம்" என்று எழுதினார் (2 கொரிந்தியர் 5:20ஆ). "ஒப்புரவாகுதலின் உபதேசம்" என்று அழைக்கப்படுகிற சுவிசேஷத் திற்கு (2 கொரிந்தியர் 5:19) நாம் பதில்செயல் செய்ய வேண்டும். நாம் விசுவாசித்துக் கீழ்ப்படிகிறபோது, இரட்சிக்கப்படுகிறவர்களின் கூட்டத்தில் நம்மைத் தேவன் சேர்த்துக் கொள்கிறார் (நடபடிகள் 2:38, 41, 47). நாம் "ஒரே சரீரத்திற்குள் [சபைக்குள்; எபேசியர் 1:22, 23] சிலுவையினால் தேவனுக்கு" ஒப்புரவாக்கப்படுகிறோம் (எபேசியர் 2:16ஆ).

5:11ல் KJV வேதாகமத்தில், "reconciliation" என்பதற்குப் பதிலாக "atonement" என்ற வார்த்தை உள்ளது. சிலவேளைகளில் பிரசங்கியார்கள் "atonement" என்பதை "at-one-ment" என்று எழுதுகின்றனர். இவ்வார்த்தை, ஒருகாலத்தில் விலகியிருந்த இரு நண்பர்கள் இப்போது ஒன்றிணைக்கப்பட்டனர் ("at one") என்ற கருத்தை மறைமுகமாய் உணர்த்துவதாக ஆலோசனை தெரிவிக்கின்றனர். "Reconciliation" என்ற வார்த்தையை நீங்கள் எவ்விதம் விளக்கப்படுத்தினாலும், அவ்வார்த்தை இயேசு மரித்ததால் தேவனுடனான *நட்புறவு* மீளக்கட்டுவிக்கப்பட முடிகிறது என்ற ஆச்சரியமான சத்தியத்தை அறிவிக்கிறது. NCV வேதாகமத்தில் 10 மற்றும் 11ம் வசனங்கள் பின்வருமாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன: "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவர் தமது குமாரனுடைய மரணத்தின் மூலமாக நம்முடன் நண்பரானார். … அவர் [இயேசு] மூலமாக நாம் இப்போது திரும்பவும் தேவனுடைய நண்பர்களாக இருக்கிறோம்."

# *நிகழ்காலத்தில் இரட்சிப்பு*
# *(5:9, 10)*

*நாம் கடந்தகாலப் பாவங்களில் இருந்து இரட்சிக்கப்படுதல் மட்டுமின்றி, அன்றாடமும் நமக்கு ஆவிக்குரிய உதவி தேவைப்படுகிறது. நாம் தொடர்ந்து பாவம் செய்கிறோம். நாம் அடிக்கடி பரீட்சைகள் மற்றும் சோதனைகளை எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் வாழ்வின் அறைகூவல்களுடன் இன்னமும் போராடிக்கொண்டிருக்கிறோம் (1 யோவான் 1:9; 1 பேதுரு 4:12; மத்தேயு 13:22). நமது வேதவசனப்பகுதியில், "அதிக நிச்சயமாமே" என்ற சொற்றொடரை நாம் இரண்டுமுறை (வசனங்கள் 9, 10) காண்கிறோம். கடந்தகாலப் பாவங்களின் குற்றங்களில் இருந்து நம்மை இரட்சிப்பதற்குத் தேவன் "அதிகமானவற்றை" நமக்காகச் செய்கிறார்; அவர் அன்றாடம் நமக்குத் தொடர்ந்து உதவுகிறார் (எபிரெயர் 13:5, 6). பவுல், "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" என்று கூறியபோது (வசனம் 10), அவர் "நிகழ்காலத்தில் இரட்சிப்பு" என்பதைத் தமது சிந்தையில் கொண்டிருந்திருப்பார் என்பது உறுதி.*

*"நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது" என்று பவுல் கூறியபோது, அவர் எதனை அர்த்தப்படுத்தினார்? ஒருவேளை அவர் இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறிப்பிட்டிருக்கலாம்: இயேசு ஜீவனுள்ளவராக இருப்பதால், நாம் தேவன் அவரது பலியை ஏற்றுக்கொண்டார் என்றும் ஆகவே நாம் இரட்சிக்கப்பட முடியும் என்றும் அறிகிறோம். 4ம் அதிகாரத்தில் பவுல், கிறிஸ்து "நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" என்று வலியுறுத்தினார் (வசனம் 25). AB வேதாகமத்தில் நமது வேதவசனப்பகுதி, நாம் "அவருடைய [உயிர்த்தெழுதலின்] ஜீவன் மூல மாக [பாவத்தின் ஆளுகையினின்று விடுவிக்கப்பட்டோம்]" என்று கூறுகிறது (5:10ஆ).*

*நாம் "அவரது ஜீவனில் பங்குபெறுதல் மூலமாக" இரட்சிக்கப்படுகிறோம் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது (Goodspeed). 6ம் அதிகாரத்தில் பவுல், "கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் ..." என்று கூறினார் (வசனம் 8; யோவான் 14:19ஐக் காணவும்). கலாத்தியருக்குப் பவுல், "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று கூறினார் (கலாத்தியர் 2:20அ).*

*பல எழுத்தாளர்கள் 5:10ஐ, பிற்பாடு 8:34ல் பவுலின் பின்வரும் கூற்றுடன் பிணைக்கின்றனர்: "கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே." எபிரெயர் 7:25 வசனம், ரோமர் 5:10க்கு ஒரு விளக்கவுரையாகக் கருதப்படுகிறது: "மேலும் தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவரா யிருக்கிறார்."*

*நாம் பவுலின் கூற்றை எவ்விதமாகக் கண்ணோக்கினாலும்சரி, 5:10ம்*

வசனமானது கர்த்தருடைய "இரட்சிப்பின் ஊழியம் சிலுவையில் முடியவில்லை, ஆனால் அதிலிருந்து தொடருகிறது" என்றே அறிவிக்கிறது.[23] இயேசுவின் வசனத்தினுடைய ஒளியில் நாம் நடக்கையில் அவரது இரத்தம் நம்மைத் தொடர்ந்து நமது பாவங்களில் இருந்து கழுவுகிறது (1 யோவான் 1:7; சங்கீதம் 119:105ஐக் காணவும்). நம்மைப் பெலப்படுத்தவும் நமக்கு உதவவும் இயேசு நம்முடன்கூட நிலைத்திருக்கிறார் (மத்தேயு 11:28; 28:20ஆ). அவர் தமது பிதாவின் முன்பாக எப்போதும் நமக்காக வேண்டுதல் செய்கிறார் (எபிரெயர் 7:25; 2:18; 4:14-16ஐக் காணவும்). "அவர் ஜீவிப்பதால்" என்ற தலைப்புக் கொண்ட ஒரு பாடல் இதை நன்கு விளக்கப்படுத்துகிறது. அதன் பல்லவி பின்வரும் வார்த்தைகளைக் கொண்டுள்ளது:

> அவர் ஜீவிப்பதால் நான் நாளைய தினத்தை எதிர்கொள்ள முடியும், அவர் ஜீவிப்பதால் பயம் யாவும் போயிற்று;
> அவர் எதிர்காலத்தைப் பற்றிக்கொண்டுள்ளார் என்று நான் அறிந்திருப்பதாலும்,
> அவர் ஜீவிப்பதாலும் வாழ்வது சாலச்சிறந்ததாகிறது.[24]

நாம் தேவனுக்குச் *சத்துருக்களாயிருந்தபோதே* அவர் நமக்காக இவ்வளவு செய்திருக்கிறார் என்றால், இப்போது நாம் அவருக்குச் *சிநேகிதர்களாக* இருந்தால் அவர் "எவ்வளவு அதிகமாய்" செய்வார் என்பதே பவுலின் விவாதமாக இருந்தது! 8ம் அதிகாரத்தில் அவர் இதேபோன்ற விவாதத்தைப் பயன்படுத்தினார்: "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடுகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (வசனம் 32). வேறுவார்த்தைகளில் சொல்வதென்றால், தேவன் நமக்குப் பெரியவற்றைச் செய்துள்ளார் என்றால், அவர் நமக்குச் சிறியவற்றையும் செய்யமாட்டாரா? பவுல் 8ம் அதிகாரத்தை வாழ்வு நமக்கு எதைக் கொண்டுவந்தாலும், கர்த்தர் எப்போதும் நம்முடன் *இருந்து* நமக்கு உதவு*வார்* என்ற உறுதிப்பாட்டைக் கொண்டு முடித்தார்:

> உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் (8:35-39).

## எதிர்காலத்தில் இரட்சிப்பு (5:9)

நமது வேதவசனப்பகுதியானது கடந்தகாலத்திலும் நிகழ்காலத்திலும் இரட்சிப்பு என்பதைப் பற்றிப் பேசுகிறது; அது எதிர்காலத்தில் இரட்சிப்புப் பற்றியும் குறிப்பிடுகிறது. 9ம் வசனத்தில் நாம், "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே." "இரட் சிக்கப்படுவது" என்பது எதிர்கால வினைச்சொல்லில் உள்ளதால், இவ்வசனத்தில் உள்ள "கோபாக்கினை" என்பது நியாயத்தீர்ப்பின் நாளில் அநீதியானவர்களுக்கு எதிரான தேவனுடைய கோபமாகும் என்று பெரும்பான்மையானவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். 9ம் வசனம் தேவனுடைய கிருபையின் இரண்டு அம்சங்களை விளக்கப்படுத்துகிறது. அவரது கிருபையினிமித்தம், நாம் பெறத்தகுதி*யற்றவர்களாக* இருந்த போதே அவர் அதை நமக்குக் கொடுத்தார்: அது நீதிமானாக்கப்படுதல். அவரது கிருபையினிமித்தம் நாம் பெற்றுக்கொள்ளத் தகுதியானதை நமக்குக் *கொடாதிருக்கிறார்*: அது கோபம்.

மீண்டுமாகப், பவுல் நாம் "அவராலே - அதாவது, கிறிஸ்துவினாலே - இரட்சிக்கப்பட்டோம்" என்பதை வலியுறுத்தினார். ஆட்டுக்குட்டியானவரின் விலைமதிப்பற்ற இரத்தத்தினால் நாம் கடந்தகாலப் பாவங்களில் இருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறோம், அன்றாடம் இரட்சிக்கப்படுகிறோம், மற்றும் நித்தியத்திற்கும் கடைசியில் இரட்சிக்கப்படுவோம்! வெளிப்படுத்தின விசேஷம் 7ம் அதிகாரம் இரட்சிக்கப்பட்டவர்கள் தேவனுடைய அரியணையைச் சுற்றிலும் இருக்கிற, இருதயத்தை அசைக்கச் செய்யும் காட்சியைச் சித்தரிக்கிறது. அவர்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிறார்கள். 14ம் வசனமானது, அவர்கள் "தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" என்று சித்திரிக்கிறது.

பழைய பாடல் ஒன்று பின்வருமாறு அறிவிக்கிறது,

மகாப்பெரிய நாளொன்று வருகிறது,
மகாப்பெரிய நாளொன்று வருகிறது,
பரிசுத்தவான்களும் பாவிகளும் வலது இடது புறமாகப் பிரிக்கப்படும்
மகாப்பெரிய நாளொன்று நெருங்கி வருகிறது;
வரவிருக்கும் அந்த நாளுக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?

பிரகாசமான நாளொன்று வருகிறது,
பிரகாசமான நாளொன்று வருகிறது;
ஆனால் அதன் பிரகாசம் கர்த்தரை அன்புகூருபவர்களுக்கு மாத்திரமே வரும்,
வரவிருக்கும் அந்த நாளுக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?

கவலைக்குரிய நாளொன்று வருகிறது,
கவலைக்குரிய நாளொன்று வருகிறது,
அவர் "அகன்றுபோங்கள், உங்களை அறியேன்" என்று கூறும்
அழிவு வார்த்தையைப் பாவிகள் கேட்கவிருக்கும்
கவலைக்குரிய நாளொன்று வருகிறது;

*வரவிருக்கும் அந்த நாளுக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?*[25]

*நியாயத்தீர்ப்பின் நாள் உங்களுக்கு "ஒரு பிரகாசமான நாளாக" இருக்குமா? அல்லது "ஒரு கவலைக்குரிய நாளாக" இருக்குமா? அது உங்கள் அங்கிகள் "ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் தோய்த்து வெளுக்கப்பட்டதா இல்லையா" என்பதைப் பொறுத்ததாகும்.*

## முடிவுரை

*பவுல் கர்த்தரிடத்தில் இருந்து தாம் கண்டறிந்த சந்தோஷத்தின் தன்முனைப்பான வெளிப்பாட்டில் பேசினார்: "அதுவுமல்லாமல், இப்போது ... தேவனைப்*[26]*பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்" (வசனம் 11). பவுலின் [அகம்மகிழ்தல்/மேன்மை பாராட்டுதல்] என்பது அவர் செய்திருந்த எவற்றிற்காகவும் அவர் தமக்குத்தாமே பாராட்டிக்கொண்டதாக இருக்கவில்லை, ஆனால் அவர் தேவனுக்குள் மேன்மை பாராட்டினார். 2 மற்றும் 3ம் வசனங்களில், அவர் தேவன் கிறிஸ்தவர்களுக்குச்* செய்வது *பற்றி அகம் மகிழ்ந்தார், ஆனால் அவரது அகம்மகிழ்தல் என்பது ஆசீர்வாதங்களுடன் மட்டுப்படுத்தப்படவில்லை. அவர் "தேவனுக்குள்ளாகவே" மேன்மைபாராட்டினார்: தேவன் யாராக இருக்கிறார் மற்றும் தேவன் என்னவாக இருக்கிறார் என்பது பற்றி அவர் மேன்மைபாராட்டினார். எனது பெண்கள் சிறுமிகளாக இருந்தபோது, மற்றும் நான் ஒரு பயணத்தில் இருந்து திரும்பி வந்திருந்தபோது, சிலவேளைகளில் அவர்களின் பின்வரும் கேள்வியை நான் எதிர்கொள்வதுண்டு: "நீங்கள் எங்களுக்கு என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்?" அவர்கள், "நீங்கள் இல்லாமல் நாங்கள் தவித்தோம், அப்பா!" என்றோ அல்லது "அப்பா நீங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்தது மிகவும் நல்லவிஷயம்!" என்றோ கூறவில்லை, ஆனால் "நீங்கள் எங்களுக்கு என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்றே கேட்டனர். ஆவிக்குரிய வகையில் பேசுவதென்றால், சிலர் பிள்ளைகளின் மனநிலையில் இருந்து ஒருநாளும் வளர்ந்து பக்குவப்படாமலே இருக்கின்றனர்: அவர்களின் பிரதான அக்கறை பரலோகத்தின் பிதாவின்மீதல்ல, பரலோகத்தின் பிதா தங்களுக்கு என்ன செய்யக்கூடும் என்பதாகவே உள்ளது. பவுல் அப்படியில்லை. அவர் "தேவனில்" அகம்மகிழ்ந்தார்.*

*ரோமர் 5:1-11ன் கலந்துரையாடலைப் பவுல் முடிக்கையில், நமது வேத வசனப்பகுதியில் உள்ள எல்லா ஆசீர்வாதங்களும் "இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய்" உள்ளன என்பதை அவர் மீண்டும் வலியுறுத்தினார் (வசனம் 11ஆ). பிரசங்கியார் ஒருவர் "இழந்துபோகப்பட்டுள்ள" மக்களைப் பற்றிப் பேசியதை நான்கு வயதுச்சிறுமி ஒருத்தி கவனித்துக் கேட்டிருந்தாள். அவள் ஒருநாள், "தேவனே வழிதவறிப்போன மக்கள் இனி ஒருபோதும் வழி தவறிப்போய்விடாதபடிக்கு இல்லத்திற்கு அவர்கள் வழியைக் கண்டறிய உதவும்" என்று ஜெபித்தாள்.*[27] *பலர் "இல்லந்திரும்ப தங்கள் வழியைக் கண்டறிய" வேண்டியுள்ளது - இருப்பினும் அவர்கள் தெருவின் முகவரியை அல்ல, ஆனால் இயேசுகிறிஸ்துவையே கண்ணோக்க வேண்டியுள்ளது. அவர்மூலமாக மாத்திரமே நாம் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட முடியும்.*

*இந்தப்பாடத்தில், நாம் கடந்தகாலத்தில் இரட்சிப்பு, நிகழ்காலத்தில் இரட்சிப்பு, மற்றும் எதிர்காலத்தில் இரட்சிப்பு ஆகியவற்றைப் பற்றிப் பேசினோம். நாம் இதை முடிக்கையில், உங்கள் சொந்த வாழ்க்கையை மதிப்பீடு*

*செய்யுங்கள். உங்கள் விசுவாசம் உங்களை ஞானஸ்நானம் பெற வழிநடத்திய போது உங்கள் பாவங்கள் கழுவப்படுதலினால் கடந்தகால இரட்சிப்பை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்களா (நடபடிகள் 22:16)? தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்தில் நடக்கையில், உங்கள் ஆத்துமாவை [இயேசுவின்] இரத்தம் தொடர்ந்து சுத்திகரிக்கும் நிகழ்கால இரட்சிப்பை நீங்கள் மகிழ்வுடன் அனுபவிக்கிறீர்களா? (1 யோவான் 1:7, 9)? அப்படியானால், நீங்கள் உங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் தோய்த்து வெளுத்தவர்களாகத் தேவனுடைய அரியணையைச் சுற்றிலும் ஒன்றுகூடும் எதிர்கால இரட்சிப்பின் நம்பிக்கையுடன் வாழமுடியும் (வெளிப்படுத்தின விசேஷம் 7:14). நீங்கள் அந்த நம்பிக்கையைக் கொண்டிராவிட்டால், நீங்கள் இன்றே கர்த்தரிடமாய் வரும்படி (அல்லது திரும்பி வரும்படி) உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன். நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்: கிறிஸ்து உங்களுக்காக மரித்தார்!*

---

குறிப்புகள்

[1]Adapted from David F. Burgess, comp., *Encyclopedia of Sermon Illustrations* (St. Louis: Concordia Publishing House, 1988), 95. [2]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 222, n. 20. [3]James R. Edwards, *Romans*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1992), 139. [4]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 55. [5]Richard A. Batey, *The Letter of Paul to the Romans*, The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 67-68. [6]G. Delling, *"kairōs,"* in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 389. *"காலம்" என்பதற்குரிய* ("chronology" *போன்ற வார்த்தைகளில் பயன்படுத்தப்படக்கூடிய chronos என்ற) இன்னொரு வார்த்தை காலகட்டத்தைக் குறிப்பதாக உள்ளது.* [7]This timing is discussed in Jimmy Allen, *Survey of Romans*, 4th ed., rev. (Searcy, Ark.: By the author, 1973), 63. [8]Morris, 222. [9]*The Analytical Greek Lexicon,* 55, 364. [10]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 651.

[11]Ibid., 576. [12]Morris, 225. [13]C. S. Lewis, *The Problem of Pain* (Oxford: N.p., 1940; reprint, New York: Macmillan Publishing Co., 1962), 91. *லூயிஸ் என்பவர் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் தேவநம்பிக்கையற்றவராக இருந்து, பின்னர் தேவன்மீது விசுவாசம் கொண்டவராக ஆனவர்.* [14]Morris, 224. [15]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 144. [16]*கிரேக்க மொழி வேதாகமத்தில், "நல்லவன்" என்ற சொற்றொடரில் "மனிதன்" என்பதற்கான சொல் எதுவும் இல்லை. இந்தச் சொற்றொடர், "நல்ல விஷயம்" என்று அர்த்தப்படக்கூடும். பார்க்ளே என்பவர் மொழிபெயர்த்துள்ள வேதாகமத்தில்,* "good cause" *என்றுள்ளது.* [17]*ஒருவேளை, உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்க மான விவரிப்பு ஒன்றை நீங்கள் இங்கு கூடுதலாகக் கூறலாம். அமெரிக்காவில் இதைக் கேட்பவர்களுக்கு, 1982ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வாஷிங்டன்* DC*யில் ஏற்பட்ட ஃபுளோரிடா 90 விமான விபத்திற்குப்பின்பு மற்றவர்களைக் காப்பாற்ற உதவிசெய்த ஒரு மனிதரைப் பற்றிய விவரிப்பு நல்லதாக உள்ளது. அவர் மற்றவர்களைக் காப்பாற்றினார், ஆனால் அவர்தாமே மூழ்கிப்போனார்.* (Burgess, 34.) [18]Stott, 144. [19]Charles H. Spurgeon,

quoed in Joseph S. Excell, *The Biblical Illustrator* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 364. [20]*உங்கள் உரையைக் கேட்பவர்கள் அறிந்துள்ள தற்காலத் தீவிரவாதியொருவரை இவ்விடத்தில் பதிலியாகப் பயன்படுத்த நீங்கள் விரும்பலாம்.*

[21]*The Analytical Greek Lexicon,* 16, 217. [22]Vine, 513-14. [23]J. D. Thomas, *Romans,* The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 38. [24]William J. and Gloria Gaither, "Because He Lives," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [25]Will L. Thompson, "There's a Great Day Coming," *Christian Hymns, III,* ed. L. O. Sanderson (Nashville: Gospel Advocate Co., 1966). [26]***2:17**ல் பவுல் யூதர்கள் தேவனுக்குள் மேன்மைபாராட்டினர், ஆனால் அவர்கள் தங்களைத் தேவன் தமது விசேஷித்த மக்களினமாகத் தேர்ந்துகொண்டது பற்றி மேன்மைபாராட்டின அளவுக்குத் தேவன்மீது மேன்மை பாராட்டவில்லை என்று கூறினார். தேவனுக்குள் அவர்களின் மேன்மைபாராட்டுதல் (களிகூறுதல்/அகம் மகிழ்தல்) என்பது சுயத்தை மையமாகக் கொண்டிருந்தது, அதேவேளையில் பவுலின் மேன்மை பாராட்டுதல் தேவனை மையமாகக் கொண்டிருந்தது.* [27]Dale Hartman, sermon on "Spiritual Etiquette" preached at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 4 January 2004.